
அறிந்திட அதிசயங்கள் காத்திருக்கும்
உங்கள் PAPER
E – Magazine
தமிழ்

# ஆன்மிகம்



**ஆன்மீகம்: அன்பின் அடையாளம், அமைதியின் ஆதாரம்**

உலகில் மனிதனின் ஆன்மீக தேடல் என்பது பல மதங்களின் வழியாக வெளிப்படுகிறது. இந்து மதம், கிறிஸ்தவம், இசுலாம் என்பவற்றில் காணப்படும்

ஆன்மீக அடிப்படைகள் அன்பு, கருணை, மற்றும் ஒற்றுமையின் மையமாக அமைகின்றன. இந்த மதங்கள் ஆழமான ஆன்மீக நெறிகளையும், மனிதனின் உள்ளுணர்வைத் தூண்டும் வழிபாட்டு முறைகளையும் வழங்குகின்றன.

இந்து மதம் தனது வேதங்கள் மற்றும் உபநிஷதங்கள் மூலம் அடியெடுத்துள்ளது, இவை உயிரின் பொருளையும் பிரபஞ்ச இணைப்பையும் விளக்குகின்றன. கிறிஸ்தவம் இயேசு கிறிஸ்துவின் அன்பு மற்றும் பலியின் மூலம் மனித ஆத்மாவின் மீட்சியை உணர்த்துகிறது.
இசுலாம் அல்லாவின் ஏகத்துவத்தையும் முஹம்மது நபியின் வாழ்வியல் அறத்தையும் பின்பற்றி அமைதியையும் நீதியையும் நாடுகிறது.

இந்த மூன்று மதங்களும் தங்கள் தனித்துவமான வழிகளில் ஆன்மீக உண்மைகளை விளக்கினாலும், அவற்றின் மையம் ஒன்றுதான்; அதாவது **மனித நேயம் மற்றும் உயிர் ஒற்றுமை.**
இந்த ஆன்மீகத் தேடல் நம்மை அன்பின் உச்சத்தில் சந்திக்க வைக்கும் பயணமாகும். அன்பின் இந்த அற்புத பயணத்தில் நாம் சேர்ந்து பயணிப்போம், ஒருங்கிணைந்த மனித நேயத்தின் மூலம் உலகத்தில் அமைதியை உருவாக்குவோம்.

# ஆசிரியரிடமிருந்து...

அன்புள்ள வாசகர்களே,

எங்களின் 'உங்கள் பேப்பர்' இரண்டாவது பதிப்பில் உங்களை வரவேற்கிறேன். இந்த இதழ் அனைத்து வாசகர்களையும் ஆன்மீகம் சார்ந்த பல தகவல்களுடன் இணைத்து மகிழ்விக்கும் என நம்புகிறோம்.

இது தேர்வு முடிவுகள் வந்த பருவம்; தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துகள்! உங்கள் அடுத்த படிப்புகளின் பாதையில் தன்னம்பிக்கையுடன் பயணியுங்கள். தேர்வு முடிவுகள் உங்கள் சிறந்த நாள்களை குறிக்கத் தொடங்கட்டும்!

சிலர் தேர்வில் வெற்றியை அடையமுடியாமல் போய் இருந்துருக்கலாம். இது முடிவு அல்ல; இதுதான் புதிய வாய்ப்புக்கான ஆரம்பம். ஒரு கதவு மூடப்பட்டால், மற்ற கதவுகள் திறக்கப்படுகின்றன. யார் ஒருமுறை தோல்வியடைந்தாலும் தன் முயற்சியால் வாழ்வில் சாதித்தார்? பில் கேட்ஸ் தொழில்நுட்ப துறையில், கே.எப்.சி. நிறுவனத்தின் நிறுவனர் கர்னல் சாண்டர்ஸ் என, உலகில் வெற்றியைத் துரத்தி சென்றோருக்கு நிறைய உதாரணங்கள் உள்ளன. வெற்றி மற்றும் தோல்வி, இரண்டும் எங்களை முன்னோக்கி நகர்த்தும் பாடமாகவே இரட்டிக்கட்டும்.

இதுதவிர, வாசகர்களின் கருத்துகளை மதிப்புமிக்கும் வண்ணம் நாங்கள் எங்கள் பத்திரிகையின் அனைத்து பிரிவுகளையும் தனித்தனியாக குறுந்தகவல் இதழ்களாக வெளியிட முடிவு செய்துள்ளோம். இது உங்கள் வாசிப்பு அனுபவத்தை இன்னும் சுகமாக்கும். நடப்பு நிகழ்வுகள், சினிமா, விளையாட்டு, ஜோதிடம், பொது அறிவு, மற்றும் பல பிரிவுகளில் புதிய கண்ணோட்டங்களை பெற உங்களை ஊக்குவிக்கிறோம்.

மேலும், நாங்கள் உங்கள் குரல்களையும் கேட்க விரும்புகிறோம். உங்கள் கருத்துகள், படைப்புகள், மற்றும் அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களுடைய ஆதரவு தான் இந்த இதழின் மூச்சு.

உங்களுடைய பல்வேறு கருத்துக்கள், ஆலோசனைகள், மற்றும் பங்களிப்புகள் நமது இதழின் தரத்தை உயர்த்துவதில் மிகவும் முக்கியமானவை. நாங்கள் உங்கள் வாழ்வின் பல பகுதிகளை ஒளிரச் செய்ய உதவும் வண்ணம் முயற்சிக்கிறோம்.

**மிக்க நன்றி,**
**உங்கள் பேப்பர்**

## எல்லாம் விதிப்படி என்றால் கடவுள் எதற்கு?

ஒரு நாள் சிஷ்யன் ஒருவன் தனது குருவிடம் கேட்டான், "குருவே, எல்லாமே விதிப்படி தான் நடக்கிறது என்றால், நாம் எதற்காக கடவுளை கும்பிட வேண்டும்?" என்று. அதற்கு குரு சிஷ்யனிடம், "நீங்கள் கொளுத்தும் வெயிலில் ஒரு ஊருக்கு நடந்து செல்கிறீர்கள் என்றால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு சிஷ்யன் கூறினான் "காலில் செருப்பு அணிந்து கொள்வேன், தலைக்கு குடை பிடித்துக் கொள்வேன், குடிப்பதற்கு தண்ணீர் எடுத்துக் கொள்வேன், அசதியின் பொழுது மரத்தடி நிழலில் ஓய்வெடுத்து கொள்வேன்" என்று கூறினான். அதற்கு குரு, "நீங்கள் வெயிலில் நடக்கும் போது கொடிய வெப்பத்தில் இருந்து உங்களை பாதுகாக்க செருப்பு, தண்ணீர், குடை, மரத்தடி நிழல் என்று அனைத்தும் தேவைப்படுகிறது.

அதே போல் இறைவனிடம் நீ பிரார்த்தனை செய்து கொள்ளும் பொழுது, விதி என்கிற கொடிய வெப்பத்தில் இருந்து உங்களை பாதுகாத்து கொள்ள முடியும். இறை வழிபாடு கடும் வெயிலில் குளிர் தரும் நிழலாகும். வாழ்க்கையின் கஷ்ட காலங்களை கடக்கும் பொழுது கடவுளைத் துணைக்கு அழைத்துக் கொள்வது நம்மை பத்திரமாக கரை சேர்க்கும் கலங்கரை விளக்கமாகும்" என்று கூறினார்.





## கடவுள் மீதான நம்பிக்கை: மதம் தாண்டி ஒரு அனுபவம்

உலகில் பல்வேறு மதங்கள் உள்ளன, அவற்றின் சாராம்சம் ஒன்றே தான் – கடவுள் மீதான நம்பிக்கை. இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் என்னும் முக்கியமான மூன்று மதங்களும் இந்த உண்மையை ஒருமித்து ஏற்றுக்கொண்டு வளர்ந்துள்ளன.

**இந்து சமயம்**

இந்து சமயத்தில் பல்வேறு கடவுள்கள் உள்ளனர், ஆனால் அனைத்துக்கும் அடிப்படையில் ஒரே பிரம்மம் உள்ளது. இந்துக்கள் பூஜை, யோகா, தியானம் போன்ற ஆன்மீக செயல்பாடுகள் மூலம் கடவுளை அடைய முயற்சிக்கின்றனர். இவை அவர்களின் வாழ்க்கையில் அமைதியையும் அனுபவத்தையும் தருகின்றன.

**கிறிஸ்தவம்**

கிறிஸ்தவ சமயத்தில் கடவுளை ஏக கடவுளாக கருதுவதுடன், இயேசு கிறிஸ்துவின் போதனைகள் மற்றும் அவரது தியாகத்தை மையமாக கொண்டுள்ளது. பிரார்த்தனை, தேவாலயத்தில் சேவை மற்றும் சமூக சேவைகள் மூலம் கடவுளின் அருளை அடைய முயல்கின்றனர். இந்த செயல்கள் நம்பிக்கையையும் பகிர்ந்துகொள்வதையும் வளர்க்கின்றன.

**இஸ்லாம்**

இஸ்லாமில் அல்லாஹ் ஒரே கடவுள் என்று நம்பப்படுகிறது. முஸ்லிம்கள் தினமும் ஐந்து நேரம் நமாஸ் செய்து அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துகின்றனர். ரமலான் மாதத்தில் நோன்பு இருந்து, அல்லாஹ்வின் மீதான தீவிர பக்தியை வெளிப்படுத்துகின்றனர்.

மூன்று மதங்களின் போதனைகளும் மனித வாழ்க்கையில் கடவுள் மீதான நம்பிக்கையை அடிப்படையாக கொண்டுள்ளன. இந்த நம்பிக்கை மனிதர்களை நல்ல பாதையில் வழிநடத்தும் ஒரு வலிமையான கருவியாக உள்ளது. அதனால், எந்த கடவுளை நாம் வணங்கினாலும், அந்த நம்பிக்கையே நம் வாழ்க்கையில் அவசியமானது என்பதை உணர்தல் வேண்டும்.

# உத்தவ கீதை

பகவான் கிருஷ்ணனின் குழந்தைப் பருவம் முதலே, அவருக்குப் பணிவிடைகள் செய்து, தேரோட்டி, பல்வேறு சேவைகள் புரிந்தவர், உத்தவர். இவர் தனது வாழ்நாளில், தனக்கென நன்மைகளோ வரங்களோ கண்ணனிடம் கேட்டதில்லை.

துவாபரயுகத்தில், தமது அவதாரப் பணியை முடித்துவிட்ட நிலையில், உத்தவரிடம் ஸ்ரீகிருஷ்ணர், உத்தவரே, இந்த அவதாரத்தில் பலர் என்னிடம் பல வரங்களும், நன்மைகளும் பெற்றிருக்கின்றனர். ஆனால், நீங்கள் எதுவுமே கேட்டதில்லை. ஏதாவது கேளுங்கள், தருகிறேன். உங்களுக்கும் ஏதாவது நன்மைகள் செய்துவிட்டே, எனது அவதாரப் பணியை முடிக்க நினைக்கிறேன் என்றார்.

பெருமானே! நீ வாழச் சொன்ன வழிவேறு; நீ வாழ்ந்து காட்டிய வழி வேறு! நீ நடத்திய மகாபாரத நாடகத்தில்... நீ ஏற்ற பாத்திரத்தில், நீ புரிந்த செயல்களில், எனக்குப் புரியாத விஷயங்கள் பல உண்டு. அவற்றுக்கெல்லாம் காரணங்களை அறிய ஆவலாக இருக்கிறேன் நிறைவேற்றுவாயா? என்றார் உத்தவர்.

உத்தவரே! அன்று குருக்ஷேத்திரப் போரில் அர்ஜுனனுக்காக நான் சொன்னது, பகவத் கீதை. இன்று உங்களுக்குத் தரும் பதில்கள், உத்தவ கீதை. அதற்காகவே உங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தேன்.தயங்காமல் கேளுங்கள் என்றான் பரந்தாமன்.



உத்தவர் கேட்க ஆரம்பித்தார்;
கண்ணா! முதலில் எனக்கு ஒரு விளக்கம் வேண்டும்.

"உண்மையான நண்பன் யார்?"
"நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பு இல்லாமலேயே வந்து உதவி செய்பவனே உற்ற நண்பன்" என்றான் கண்ணன்.

இந்த பதிலை எதிர்ப்பார்த்து தான் உத்தவர் இந்த கேள்வியை முன் வைக்கிறார்.

உத்தவருக்கு கிருஷ்ணனின் மீது தீராத கோபம் இருந்திருக்க கூடும், ஆனாலும் பேசாமல் இருந்தார். சந்தர்ப்பம் கிடைத்தும் கேட்காமல் விடுவாரா என்ன?

முதல் கேள்வியே நண்பன் என்பவன் யார் என்று கேட்க அதற்கு கண்ணன் சொன்ன பதிலில் இருந்தே ஆரம்பிக்கிறார் உத்தவர்.

"நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பு இல்லாமலேயே வந்து உதவி செய்பவனே உற்ற நண்பன் என்றாயே... பின்பு ஏன் பாண்டவர்கள் சூதாட ஆரம்பித்த பொழுதே தடுக்கவோ காக்கவோ இல்லை? நீ மட்டும் மனது வைத்திருந்தால் இவ்வளவு பெரிய கொடூரமான போருக்கே தேவை இருந்திருக்காதே" என்று உண்மையான சோகமும் அக்கறையும் கூடவே கொஞ்சம் கோபமும் வைத்து கேட்டார்...

அது மட்டுமா?

"எதனைக் காத்ததாக நீ பெருமைப்படுகிறாய்? ஆபத்தில் உதவுபவன் தானே ஆபத்பாந்தவன்? இந்த நிலையில் உதவாத நீயா ஆபத்பாந்தவன்? நீ செய்தது தருமமா?" என்று சராமாரியாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை கடிந்துக் கொள்கிறார் உத்தவர்...

நியாயம் தானே?
உலகின் ஒவ்வொரு அசைவையும் அறிந்த ஹரியே இந்த தவறை செய்தான் எனில் யாருக்குத்தான் கோபம் வராது?


## உத்தவ கீதை

"தருமன் செல்வத்தை இழந்தான்; நாட்டைஇழந்தான்; தன்னையும் இழந்தான். சூதாடியதற்குத் தண்டனையாக. அதோடு அவனை விட்டிருக்கலாம். தம்பிகளை அவன் பணயம் வைத்த போதாவது, நீ சபைக்குள் நுழைந்து தடுத்திருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை".

"திரௌபதி அதிர்ஷ்டம் மிக்கவள். அவளைப் பணயம் வைத்து ஆடு, இழந்தது அனைத்தையும் திருப்பித் தருகிறேன் என்று சவால் விட்டான் துரியோதனன். அப்போதாவது, உனது தெய்வீக சக்தியால், அந்தப் பொய்யான பகடைக் காய்கள் தருமனுக்குச் சாதகமாக விழும்படி செய்திருக்கலாம். அதையும் செய்யவில்லை".

"மாறாக, திரவுபதியின் துகிலை உரித்து, அவளின் மானம் பறிபோகும் நிலை ஏற்பட்ட போது தான் சென்று, துகில் தந்தேன். திரவுபதி மானம் காத்தேன் என்று மார்தட்டிக் கொண்டாய்".

"மாற்றான் ஒருவன், குலமகள் சிகையைக் பிடித்து இழுத்து வந்து, சூதர் சபையில் பலர் முன்னிலையில், அவள் ஆடையில் கை வைத்த பிறகு, எஞ்சிய மானம் என்ன இருக்கிறது?"
என்று படபடவென கேள்விகளை தொடுக்கிறான் உத்தவர்.




வழக்கம் போல அமைதியே உருவான சாந்தமான குரலில் தனது பதிலை எடுத்துரைக்கிறான் யசோதை மைந்தன்.

"உத்தவரே"...

"விவேகம் உள்ளவனே ஜெயிக்க வேண்டும் என்பது தர்ம நியதி. துரியோதனனுக்கு இருந்த விவேகம் தருமனுக்கு இல்லை. அதனால் தான் தருமன் தோற்றான்" என்றான் கண்ணன்.

கிருஷ்ணனின் பதிலுரை கேட்டு உத்தவர் ஏதும் புரியாது திகைத்து நிற்க, கண்ணன் தொடர்ந்தான். முதலிலேயே தர்மம் எது என்பதை சுருக்கமாக சொன்ன கிருஷ்ணன் இப்பொழுது கொஞ்சம் விரிவாக அதை எடுத்துரைக்கிறான்.

"துரியோதனனுக்கு சூதாடத் தெரியாது. ஆனால், பணயம் வைக்க அவனிடம் பணமும், ஏராளமான ஆஸ்தியும் இருந்தது. பணயம் நான் வைக்கிறேன். என் மாமா சகுனி, பகடையை உருட்டிச் சூதாடுவார் என்றான் துரியோதனன். அது விவேகம். தருமனும் அது போலவே விவேகத்துடன் செயல்பட்டு, நானும் பணயம் வைக்கிறேன். ஆனால், என் சார்பாக என் மைத்துனன் ஸ்ரீகிருஷ்ணன் பகடைக்காயை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே?"

"சகுனியும் நானும் சூதாடியிருந்தால், யார் ஜெயித்திருப்பார்கள் நான் கேட்கும் எண்ணிக்கைகளைச் சகுனியால் பகடைக்காய்களில் போடத்தான் முடியுமா? அல்லது, அவன் கேட்கும் எண்ணிக்கைகளை என்னால்தான் போட முடியாதா? போகட்டும்".

"தருமன் என்னை ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ள மறந்துவிட்டான் என்பதையாவது மன்னித்து விடலாம். ஆனால், அவன் விவேகமில்லாமல் மற்றொரு மாபெரும் தவற்றையும் செய்தான்".

"ஐயோ.... விதிவசத்தால் சூதாட ஒப்புக்கொண்டேனே! ஆனால், இந்த விஷயம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மட்டும் தெரியவே கூடாது என்று எண்ணி என்னிடமே அதே கோரிக்கையை வைக்கிறான்".

## உத்தவ கீதை

"கடவுளே! அவன் மட்டும் சூதாட்ட மண்டபத்துக்கு வராமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்; என்னை மண்டபத்துக்குள் வரமுடியாதவாறு, அவனே கட்டிப் போட்டுவிட்டான். நான் அங்கு வரக்கூடாதென என்னிடமே வேண்டிக்கொண்டான். யாராவது தனது பிரார்த்தனையால் என்னைக் கூப்பிடமாட்டார்களா என்று மண்டபத்துக்கு வெளியில் காத்துக்கொண்டு நின்றேன்".

"அண்ணனின் ஆணையை நிறைவேற்ற துச்சாதனன் சென்று, திரவுபதியின் சிகையைப் பிடித்தபோது, அவளாவது என்னைக் கூப்பிட்டாளா? இல்லை. அவளும் தனது பலத்தையே நம்பி, சபையில் வந்து, வாதங்கள் செய்துகொண்டிருந்தாளே ஒழிய, என்னைக் கூப்பிடவில்லை!"

"நல்லவேளை... துச்சாதனன் துகிலுரித்தபோதும் தனது பலத்தால் போராடாமல், ஹரி.... ஹரி... அபயம் கிருஷ்ணா... அபயம்.. எனக்குரல் கொடுத்தாள் பாஞ்சாலி. அவளுடைய மானத்தைக் காப்பாற்ற அப்போதுதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அழைத்ததும் சென்றேன். அவள் மானத்தைக் காக்க வழிசெய்தேன். இந்தச் சம்பவத்தில் என் மீது என்ன தவறு?" என்று பதிலளித்தான் கண்ணன்.

"அருமையான விளக்கம் கண்ணா! அசந்துவிட்டேன். ஆனால் ஏமாறவில்லை. உன்னை இன்னொரு கேள்வி கேட்கிறேன்" என்றார் உத்தவர். "கேள்" என்றான் கண்ணன்.




"அப்படியானால், கூப்பிட்டால் தான் நீ வருவாயா? நீயாக, நீதியை நிலை நாட்ட, ஆபத்துகளில் உன் அடியவர்களுக்கு உதவ வரமாட்டாயா?" என்றார் உத்தவர். புன்னகைத்தான் கண்ணன்.

"உத்தவா, மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படி அமைகிறது. நான் அதை நடத்துவதும் இல்லை. அதில் குறுக்கிடுவதும் இல்லை. நான் வெறும் சாட்சி பூதம்".

"நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டு நிற்பவனே! அதுதான் தெய்வ தர்மம்" என்றான் கிருஷ்ணன்.

"நன்றாயிருக்கிறது கிருஷ்ணா! அப்படியானால், நீ அருகில் நின்று, நாங்கள் செய்யும் தீமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பாய். நாங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து பாவங்களைக் குவித்து, துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித்தானே?" என்றார் உத்தவர்.

அதற்கு கிருஷ்ணன் "உத்தவரே! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நன்றாக உணர்ந்து பாருங்கள். நான் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை நீங்கள் உணரும் போது, உங்களால் தவறுகளையோ தீவினைகளையோ நிச்சயமாகச் செய்ய முடியாது. அதை நீங்கள் மறந்துவிடும்போதுதான், எனக்குத் தெரியாமல் செயல்களைச் செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்கள். பாதிப்புக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் நிகழ்வதும் அப்போதுதான்".

"எனக்குத் தெரியாமல் சூதாடலாம் என்று தருமன் நினைத்தானே, அதுதான் அவனது அஞ்ஞானம். நான் சாட்சி பூதமாக எப்போதும், எல்லோருடனும் இருப்பவன் என்பதை தருமன் உணர்ந்திருந்தால், இந்த சூதாட்ட நிகழ்ச்சி வேறு விதமாக முடிந்திருக்கும்" என்றான் ஸ்ரீகிருஷ்ணன்.

'திருச்சிற்றம்பலம்'

## பஞ்ச புராணம் (அத்தியாயம் 2)

பஞ்ச புராணங்களின் முதன்மை பகுதியான தேவாரங்கள் பற்றிய அறிமுகத்தை முந்தய பகுதியில் பார்த்தோம், இந்த இதழில் தேவாரங்கள் பாடப்பெற்ற சில தளங்களை பார்க்கலாம்.

## தேவாரத் திருத்தலங்கள்

தேவாரத் திருத்தலங்கள் என்பவை சைவக்குரவர்களான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் அப்பர் ஆகிய இருவரும் ஏழாம் நூற்றாண்டிலும் சுந்தரர் எட்டாம் நூற்றாண்டிலும் தாம் இயற்றிய தேவாரப் பாடல்களில் பாடிய 276 சிவத்தலங்கள் ஆகும். இத்தலங்களில் குடிகொண்டுள்ள சிவனைப் பற்றி பத்து பாடல்களைக் கொண்ட பதிகங்களை ஒருவரோ, இருவரோ, மூவரோ பாடியுள்ளனர்.



தேவாரப்பாடல் பெற்ற தலங்களில்
தொண்டை நாடு (32)
நடு நாடு (22)
சோழ நாட்டு காவிரியாற்றின் வட கரை (63)
சோழ நாட்டு காவிரியாற்றின் தென் கரை(128)
பாண்டிய நாடு (14)
கொங்கு நாடு (7)
மலை நாடு (1)
துளுவ நாடு (1)
வட நாடு (5)
ஈழ நாடு (2)
புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட காவிரி தென்கரைத் தலமான திருவிடைவாய் மற்றும் திருக்கிளியன்னவூர்
ஆகிய இடங்களில் காணப்படுகின்ற 276 சிவன் கோயில்கள் அடங்கும்.

தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் இத்திருத்தலங்களை அவை அமைந்துள்ள நாடுகளை அடிப்படையாகக்கொண்டு ஓர் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பட்டியலிட்டு உள்ளார்.

இவற்றுள்
திருஞானசம்பந்தரால் பாடப்பட்டவை 219. (+பிற்சேர்க்கை 1).
இவை முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளில் இடம்பெற்று உள்ளன.

அப்பர் என்னும் திருநாவுக்கரசரால் பாடப்பட்டவை 125.
இவை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளில் இடம்பெற்று உள்ளன.

சுந்தரமூர்த்தியால் பாடப்பட்டவை 84.
இவை ஏழாம் திருமுறையில் இடம்பெற்று உள்ளன.

## தேவாரப்பாடல் பெற்ற பாண்டிய நாட்டு தலங்களின் பட்டியல்

- மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்
- செல்லூர் மதுரை திருவாப்புடையார் திருக்கோயில்
- திருப்பரங்குன்றம் சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில்
- திருவேடகம் ஏடகநாதர் திருக்கோயில்
- பிரான்மலை கொடுங்குன்றநாதர் திருக்கோயில்
- திருப்புத்தூர் திருத்தளிநாதர் திருக்கோயில்
- திருப்புனவாசல் விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில்
- ராமேஸ்வரம் ராமநாதர் திருக்கோயில்
- திருவாடானை ஆதிரத்தினேஸ்வரர் திருக்கோயில்
- காளையார் கோவில் சொர்ணகாளீஸ்வரர் திருக்கோயில்
- திருப்புவனம் புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்
- திருச்சுழி திருமேனிநாதர் திருக்கோயில்
- குற்றாலம் குற்றாலநாதர் திருக்கோயில்
- திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில்

ஓம் நமசிவாய

பஞ்சபுராணங்கள் தொடரும்...

'ஓம் நமோ நாராயண'

# ஆழ்வார்கள் (அத்தியாயம் 2)

## பொய்கையாழ்வார்



பொய்கையாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார் ஆவார்.
காஞ்சிபுரத்தில் ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் திருவெஃகா எனும் பகுதியில்லுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோவிலில் உள்ள பொய்கையில் பிறந்தவர்.

இவரால் அந்தாதியாகப் பாடப்பட்ட நூறு பாடல்களும் முதல் திருவந்தாதி எனப்படுகின்றது. முதன்முதலில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் பாடியவர்.

### பெயர்க்காரணம்

காஞ்சிபுரத்தில் பொற்றாமரைப் பொய்கையில் தோன்றியதால் பொய்கையாழ்வார் எனப் பெயர் பெற்றார்.

### பாஞ்சஜன்ய அம்சம்

சில ஆழ்வார்கள் திருமாலின் கையில் உள்ள ஆறு ஆயுதங்களில் ஒன்றின் அம்சமாகப் பிறந்தவர்கள் என்பது வைணவ கொள்கை. இதன்படி பொய்கையாழ்வார் பாஞ்சஜன்யம் எனப்படும் புனித சங்கின் அம்சம் ஆவார்.

### முதலாழ்வார்கள்

இவர் பேயாழ்வார், பூதத்தாழ்வார் எனும் ஆழ்வார்களுடன் ஒரே காலத்தில் வாழ்ந்தவராவார். இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியங்கள் மிக்க துறவறம் பூண்டு, ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள். உண்டியே உடையே என உகந்தோடும் மக்களோடு கலவாமல் ஒரு நாள் இருந்த இடத்தில் ஒரு நாள் இராமல் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

### ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திருக்கோவில்கள்



- திருவரங்கம் அரங்கநாத சுவாமி கோயில்
- திருவெக்கா சொன்ன வண்ணம்செய்த பெருமாள் கோயில்
- திருக்கோயிலூர் உலகளந்த பெருமாள் கோவில்
- திருப்பரமபதம்
- திருப்பதி வெங்கடாசலபதி கோயில்
- திருப்பாற்கடல்









| ஆதாரம் | முதலாழ்வார்களின் காலம் |
|---|---|
| மா. இராசமாணிக்கம் | 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதி |
| சாமி சிதம்பரனார் | 7ஆம் நூற்றாண்டு |
| பூர்ணலிங்கம் பிள்ளை | 7ஆம் நூற்றாண்டு |
| கலைக்களஞ்சியம் | 5ஆம், 6ஆம் நூற்றாண்டின் பின்பகுதி |
| மு. இராகவையங்கார் | 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதி முதல் 7ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரைம்க் |

ஆழ்வார்கள் வருவார்கள்...

# குழந்தைகளுக்கான சிறந்த 10 கிறிஸ்தவ உண்மைகள்



இந்த தகவல் குழந்தைகளுக்கான சிறந்த வழிகாட்டி மற்றும் கிறிஸ்தவ உண்மைகளால் நிரம்பியுள்ளது.

- கடவுள் சர்வ வல்லமை படைத்தவர், அனைத்தையும் அறிந்தவர், அனைத்தையும் நேசிப்பவர் (சர்வ அன்புடையவர்) என்றும், கடவுள் எல்லா நேரத்திலும் (சர்வவியாபி) என்றும் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

- கிறிஸ்தவத்தின் மதத் தலைவர்கள் (ஒரு தேவாலயத்தில் சேவைகளை வழிநடத்தும் பாதிரியார் அல்லது மந்திரி போன்றவர்கள்) பொதுவாக உடைகள் (vestments) எனப்படும் சிறப்பு ஆடைகளை அணிவார்கள். இவை ஒரு கத்தோலிக்க தேவாலயத்தைப் போல மிகவும் விரிவானதாக இருக்கலாம் அல்லது ஒரு பாப்டிஸ்ட் தேவாலயத்தைப் போல மிகவும் எளிமையானதாக இருக்கலாம்.

- இயேசுவின் பிறப்புக் கதை 'நேட்டிவிட்டி' என்று அழைக்கப்படுகிறது, இது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25 ஆம் தேதி கிறிஸ்துமஸ் தினத்தன்று பல கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது.

- இயேசு மேசியா என்றும் அறியப்படுகிறார், இது எபிரேய வார்த்தையான Mashiak/Mashiyach என்பதிலிருந்து எடுக்கப்பட்ட கிரேக்க வார்த்தையாகும், அதாவது "அபிஷேகம் செய்யப்பட்டவர்" அல்லது "எண்ணெய்யால் அபிஷேகம் செய்யப்பட்டவர்".

- கிறிஸ்தவத்தில் பல முக்கியமான சின்னங்கள் உள்ளன. தாமரை மலர், உதாரணமாக, கருவுறுதல் மற்றும் இயேசுவின் தாயான மரியாவுடன் தொடர்புடையது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பிரதிநிதித்துவப்படுத்தவும் இது பயன்படுத்தப்படலாம். மீன் சின்னம் "மீன்" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது மற்றும் "இயேசு கிறிஸ்து, கடவுளின் மகன், இரட்சகர்" என்பதன் சுருக்கமாகும். கிறித்தவத்தைப் பின்பற்றுவது இரகசியமாக வைக்கப்பட வேண்டியிருந்தபோது அது கட்டிடங்களில் வரையப்பட்டது!

# குழந்தைகளுக்கான சிறந்த 10 கிறிஸ்தவ உண்மைகள்

- உணவுக்கு முன், பல கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உணவை வழங்கியதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல ஒரு பிரார்த்தனை செய்கிறார்கள்.

- பல கிறிஸ்தவர்கள் தேவாலயங்கள் என்று அழைக்கப்படும் கட்டிடங்களில் வழிபடுகிறார்கள். இந்த சேவைகள் ஒரு தேவாலயத் தலைவரால் வழிநடத்தப்படுகின்றன, அவர்களுக்கு பிஷப் அல்லது ரெவரெண்ட் போன்ற பட்டங்கள் வழங்கப்படுகின்றன. கிறித்தவத்தின் வெவ்வேறு கிளைகள் வழிபாட்டிற்கு தனித்துவமான பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளன.

- ஈஸ்டர் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதலின் வருடாந்திர கொண்டாட்டத்திற்கான பெயர் மற்றும் பல கிறிஸ்தவர்களுக்கு ஆண்டின் மிகவும் சிறப்பு வாய்ந்த நேரம்.

- கிறிஸ்தவத்தைப் பற்றிய மற்றொரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், பைபிளே அச்சிடப்பட்ட முதல் புத்தகமும் கூட! இந்த முதல் அச்சிடப்பட்ட பதிப்பு குட்டன்பெர்க் பைபிள் என்று அறியப்பட்டது மற்றும் 1455 இல் முடிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 100 மில்லியனுக்கும் அதிகமான பைபிள்கள் இன்னும் அச்சிடப்படுகின்றன.

- 1உலகில் சுமார் 2.3 பில்லியன் கிறிஸ்தவர்கள் உள்ளனர் - இது உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காகும்!

குழந்தைகளுக்கான இந்த கிறிஸ்தவ உண்மைகளை நீங்கள் சுவாரஸ்யமாகக் கண்டீர்கள் என்று நம்புகிறோம்!



## உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் ஆன்மீக இதயமாக இருந்தாலும், மக்காவைப் பற்றி பலருக்குத் தெரியாத பல உண்மைகள் உள்ளன - இது வரை.

**மக்காவைப் பற்றிய 14 உண்மைகள்:**





- மக்காவைப் பற்றிய மற்றொரு உண்மை: சவூதி அரேபியா மத்திய கிழக்கில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைப் பெறுகிறது. மக்கா மற்றும் மதீனா நகரங்களில் திரண்டிருக்கும் மில்லியன் கணக்கான யாத்ரீகர்களே இதற்குக் காரணம்.

- பிரபலமான ஆங்கில பயன்பாட்டில், "மெக்கா" என்பது அதிக எண்ணிக்கையிலான மக்களை ஈர்க்கும் எந்த இடத்தையும் குறிக்கிறது.


- மஸ்ஜித் அல் ஹராம் பகுதியில் நகரம் மையமாக உள்ளது, இது நகரத்தின் பெரும்பாலான பகுதிகளை விட தாழ்வாக உள்ளது.

- கருங்கல் எப்போதும் மக்காவில் இருப்பதில்லை. கி.பி 930 இல், இது கர்மத்தியர்களால் திருடப்பட்டது, அவர்கள் அதை கிழக்கு அரேபியாவிற்கு எடுத்துச் சென்றனர்.

- பிரிட்டிஷ் செய்தித்தாள் தி டெலிகிராப் மஸ்ஜித் அல் ஹராம் உலகின் மிக விலையுயர்ந்த கட்டிடமாக பட்டியலிட்டது. இதன் மொத்த கட்டுமானச் செலவு $100 பில்லியன் ஆகும்.

- மிகவும் விலையுயர்ந்த கட்டிடங்களின் அதே பட்டியலில் 2வது இடம் அப்ராஜ் அல் பைத் ஆகும், இது மக்காவில் உள்ளது.

- மிக உயரமான கடிகார கோபுரம் கொண்ட சாதனைகள் உட்பட மற்ற உலக சாதனைகளை அப்ராஜ் அல் பைட் பெற்றுள்ளார்.


# உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் ஆன்மீக இதயமாக இருந்தாலும், மக்காவைப் பற்றி பலருக்குத் தெரியாத பல உண்மைகள் உள்ளன - இது வரை.

**மக்காவைப் பற்றிய 14 உண்மைகள்:**

- உலகில் தொடர்ந்து மக்கள் வசிக்கும் மிகப் பழமையான நகரங்களில் மக்காவும் ஒன்றாகும். ஜம்ஜாம் கிணறு மட்டும் சுமார் 4,000 ஆண்டுகள் பழமையானது என நம்பப்படுகிறது.

- இந்த நகரம் எந்த இஸ்லாமியப் பேரரசின் தலைநகராக இருந்ததில்லை. ஆனால் முஸ்லீம் ஆட்சியாளர்கள் அதன் பராமரிப்பில் தொடர்ந்து பங்களித்தனர்.

- மக்கா முழுவதும் ஹராம் எல்லைக்குள் வராது. ஹரம் எல்லைக்கு வெளியில் வரும் ஷரயா போன்ற நகரத்தின் பல சுற்றுப்புறங்கள் உள்ளன.


- நகரம் பக்கா என்று அழைக்கப்பட்டது. ஆயினும்கூட, சில அறிஞர்கள் பக்கா என்பது காபாவையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மட்டுமே குறிக்கிறது என்று கூறுகின்றனர்.

- பக்காவைத் தவிர, குரான் நகரத்தை உம்முல் குரா என்று குறிப்பிடுகிறது. உம்முல் குரா அரபு மொழியில் "அனைத்து குடியேற்றங்களுக்கும் தாய்" என்பதாகும்.

- மக்காவைப் பற்றிய மற்றொரு உண்மை: இப்போதெல்லாம் இது மக்கா அல் முகர்ரமா என்று அழைக்கப்படுகிறது. இது உண்மையில் "மக்கா தி ஆனர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

- மதீனா நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நகரமாக அறியப்பட்டாலும், அவர் தனது வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்த இடம் மக்காதான். நபிகள் நாயகம் தனது வாழ்நாளில் சுமார் 50 ஆண்டுகளை மக்காவில் கழித்தார்.

- மக்காவின் மக்கள் தொகை 1.5-2 மில்லியனுக்கு இடையில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஹஜ் பருவத்தில் 4.5 மில்லியனை நெருங்குகிறது.



# நன்றிகள்

இந்த இதழின் முடிவில், நாங்கள் உங்களுக்காக சமர்ப்பிக்கும் செய்திகள் மற்றும் கட்டுரைகள் உங்கள் அறிவை விரிவாக்கி, உங்கள் மனதில் புதிய சிந்தனைகளை தூண்டிவிடும் என்று நம்புகிறோம். 'உங்கள் பேப்பர்' இதழ் உங்களின் சமூகம், கலாச்சாரம், மற்றும் அறிவியல் துறைகளில் ஒரு பாலமாக அமைந்து, மாதம் இரு முறை உங்களுக்கு உயர்தரமான செய்திகளை வழங்கும் என்று நம்புகிறோம். உங்கள் பின்னூட்டங்களும், ஆதரவும் எங்களுக்கு முக்கியமானவை. அடுத்த இதழை வரவேற்க வாசிப்புக்கான உங்கள் ஆர்வத்துடன் நாங்கள் காத்திருக்கிறோம்.

CONTRIBUTING WRITERS - RANJITHA DEVI & BUWANI
PHOTOS CREDITS - GOOGLE, CANVA, PHOTOLAP
OUR CONTRIBUTORS - WHATSAPP, FACEBOOK, INSTAGRAM,, X AND YOUTUBE

CLICK TO FOLLOW US - @UNGALPAPER
EMAIL US - UNGALPAPER@GMAIL.COM



**மோகனபிரியா**
எழுத்தாளர் – ஜோதிடர்
"விண்மீன்களின் மொழியை எழுத்தில் பேசுகிறேன்; வாசிப்பவர்களின் விதியை ஒளிரவைக்கிறேன்."



**சசிலேகா**
எழுத்தாளர்
"எழுத்து என்பது மனித உணர்வுகளின் பாலம்; நாம் படைப்பதில் உலகம் பிணைகிறது."



**ராகசுதா**
எழுத்தாளர்
"சொல்லின் சக்தியில் உலகம் மாறும்; நாம் எழுதும் ஒவ்வொரு வார்த்தையும் புதிய கனவுகளை விதைக்கிறது."



**வேதா**
வடிவமைப்பு ஆசிரியர்
எழுத்தாளர்
"கலை என்பது கற்பனையின் கீற்றுகள்; நான் அதன் துணைவி, உங்கள் பார்வைக்கு ஒரு புதிய உலகத்தை வடிவமைக்கிறேன்."

FOR OUR ARTICALS THANKS COURTESY TO THE HINDU, TIMES NOW, INDIAN EXPRESS, TIMES OF INDIA, BUSINESS TODAY, TELEGRAPH INDIA, DECCAN HERALD, BBC, HINDUSTAN TIMES, LIVE MINT , ALL TAMIL NEWS CHANNEL IN DAILY HUNT APP, WIKIPEDIA, CINEULAGAM AND OTHER MANY WEBSITES




அறிந்திட அதிசயங்கள் காத்திருக்கும்

# உங்கள் PAPER

E – Magazine

அடுத்த இதழில் சந்திப்போம்...வணக்கம்